# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

29 ஆயிரத்து 479 திருப்பணிகள் நடந்து கொண்டிருக்கிறது. இதில், 4 ஆயிரத்து 346 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 16 ஆயிரத்து 756 பணிகள் நிறைவு பெற்றிருக்கிறது.

மேலும், உபயதாரர் நிதி மூலமாக 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 12 ஆயிரத்து 220 பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

கோயில் சொத்துகளை மீட்க வேண்டும் என்று பெருமுயற்சி எடுத்து, அதிலும் சாதனை படைத் திருக்கிறோம்.

**ரூ.8,423 கோடி மதிப்பிலான 8,106 ஏக்கர் நிலம் மீட்பு!**

8 ஆயிரத்து 423 கோடி ரூபாய் மதிப்பி லான 8 ஆயிரத்து 106 ஏக்கர் நிலங்களை மீட்டிருக்கிறோம்.

கிராமப்புற திருக்கோயில்கள் –

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதி களில் உள்ள திருக்கோயில்களுக்கான திருப் பணி, அந்த நிதி உதவித்தொகையை 1 இலட் சம் ரூபாயில் இருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, 10 ஆயிரம் திருக்கோயில் களுக்கு நிதியுதவி வழங்கியிருக்கிறோம்.

கோயில்களில், திருப்பணியோடு அறப்ப ணிகளையும் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து, 19 திருக்கோயில்களில் முதலுதவி மருத்துவமனைகளை அமைத்திருக்கிறோம்.

**திருக்கோயில்கள் சார்பாக 2,800 திருமணங்கள் நடந்துள்ளது!**

ஏழை–எளிய குடும்பங்களை சேர்ந்தவர்க ளுக்கு 4 கிராம் தங்கத்தாலி – பட்டுப் புடவை – பட்டு வேஷ்டி உள்ளிட்ட 70 ஆயிரம் மதிப் புள்ள சீர்வரிசை களுடன் திருக்கோயில்கள் சார்பாக, 2 ஆயிரத்து 800 திருமணங்களை நடத்தி வைத்து முடித்திருக்கிறோம்.

165 மாற்றுத்திறனாளி இணையர்களுக் கும் திருமணங்கள் நடைபெற்றிருக்கிறது. 2 திருக்கோயில்களில் செயல்பட்டு வந்த நாள் முழுவதும் அன்னதான திட்டத்தை இப்போது 12 திருக் கோயில்களுக்கு விரிவுபடுத்தியிருக்கி றோம்.

764 திருக்கோயில்களில், ஒரு வேளை அன்னதான திட்டத்தை செயல்படுத்திக் கொண் டிருக்கிறோம்.

திருக்கோயில்களின் தல வரலாறு – தல புராணம் – கட்டடக்கலை – கல்வெட்டுகள் குறித்த 516 தொன்மையான அரிய நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிட்டிருக்கிறோம்.

இப்போது நான் சொன்ன சாதனைகள் எல்லாம் குறைவு தான். பெரிய சாதனை புத்த கத்தின் சில பக்கங்கள் தான். ஏராளமான சாத னைகள் இருக்கிறது.

கடந்த ஆண்டு 5 இலட்சத்திற்கும் மேற்பட் டோர் கலந்துகொண்ட அனைத்துலக முத்த மிழ் முருகர் மாநாட்டை நடத்தி எல்லோரையும் திரும்பி பார்க்க வைத்தோம். இன்றைக்கு அனைத்துலக வள்ளலார் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

**பிணியை ஒழிக்கும் மருந்துதான் திராவிட மாடல் அரசின் திட்டங்கள்!**

வள்ளலாரை ஏன் நாம் உயர்த்திப் பிடிக்கிறோம் என்றால், “வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்” என்று சொல்லி, உலகுக்கே ‘தனிப்பெரும் கருணை’ என்ற அன்பு வழியை போதித்தவர் வள்ளலார் அவர் கள்! அவரது வழியில்தான், நமது திராவிட மாடல் அரசும், ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஏழை மக்களின் பசியை ‘பிணி’ என்று சொன் னார் வள்ளலார்! அந்தப் பிணியை ஒழிக்கும் மருந்துதான் நமது திராவிட மாடலின் திட்டங் கள்! அதனால்தான், பள்ளிகளில், காலை உண வுத் திட்டம் முதல் முதியோர்களுக்கான தாயு மானவர் திட்டம் வரை, அனைத்து வயதினரையும், கருணையோடு அரவணைக் கின்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

**வள்ளலாரை போற்றுவது தமிழ்நாட்டின் கடமை!**

வள்ளலார் தமிழ்ச்சமூகத்தில் உதித்த புரட்சி யாளர்; மாண்பாளர்! அவரைப் போற்ற வேண் டியது, தமிழ்நாட்டின் கடமை! என்னுடைய பேச்சுகளிலும், சமூக வலைத்தளப் பதிவுகளி லும் வள்ளலாரை நிறைய நான் மேற்கோள் காட்டியிருக்கிறேன். வள்ளலாரின் கோட்பாடு களை மேற்கோள் காட்டுவது மட்டுமல்ல, அவற்றை செயல் வடிவத்தில் நடைமுறைப்ப டுத்திக் கொண்டிருக்கிறோம்.

அவற்றையெல்லாம் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், தலைவர் கலைஞர் ஆட் சிக் காலத்தில், சென்னையில் வள்ளலார் வாழ்ந்த பகுதிக்கு, ‘வள்ளலார் நகர்’ என்று பெயர் வைத்தார். அந்த வள்ளலார் நகர் பேருந்து நிலையத்தை 10 கோடி ரூபாய் செல வில் புனரமைத்திருக்கிறோம். மதிப்பிற்குரிய கிருஷ்ணராஜ் வானவராயர் சொன்னார், நம் முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற தும் வள்ளலார் பிறந்தநாளை, ‘தனிப்பெருங்க ருணை நாளாக’ அறிவித்தோம்.

வள்ளலாரின் 200ஆவது பிறந்தநாள் தரு மசாலை நிறுவப்பட்ட 156ஆவது ஆண்டு தொடக்கம் ஜோதி தரிசனம் காட்டுவித்த 152 ஆவது ஆண்டு ஆகியவற்றை இணைத்து, 2022 அக்டோபரில் இருந்து 2023 அக்டோபர் வரை தொடர்ச்சியாக ஓராண்டு காலம் முப்பெ ரும் விழாக்களை கொண்டாடினோம்.

அதுமட்டுமல்ல, ‘வள்ளலார் 200’ என்ற பெயரில் இலச்சினை, அஞ்சல் உறை, சிறப்பு மலர் வெளியிட்டு அன்னதானம், மாணவர்க ளுக்கு இலக்கியப் போட்டிகள் என்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

**திருவொற்றியூர் நெடுஞ்சாலைக்கு வள்ளலார் நெடுஞ்சாலை என பெயர்!**

வள்ளலார் வாழ்ந்த மருதூர் இல்லத்தை புனரமைத்தோம். தைப்பூசத்தை முன்னிட்டு, வடலூர் வள்ளலார் தெய்வ நிலையத்தில், மூன்று நாட்கள் அங்கு அன்னதானம் வழங் கப்பட்டது. இன்றைக்கு திருவொற்றியூர் நெடுஞ் சாலைக்கு “வள்ளலார் நெடுஞ்சாலை” என்று பெயர் சூட்டி திறந்து வைத்திருக்கிறோம். இந்தச் சாதனைகளின் தொடர்ச்சியாகதான், வள்ள லார் பற்றாளர்களின் கோரிக்கையின் அடிப்ப டையில், அவரின் உயரிய கருத்துகளை, வாழ்க்கை நெறிகளை, உலகெங்கும் போற்றி டும் நோக்கத்துடன் இன்று, அனைத்துலக வள்ளலார் மாநாடு நடத்தப்படுகிறது.

இல்லாத சமூகத்தை கட்டமைக்க வேண்டும் என்ற அவருடைய பெருங்கனவுதான் திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சுக் கொள்கை! அத னால்தான், திராவிட இயக்கம் உருவானதில் இருந்து, தொடர்ந்து வள்ளலாரை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறோம்!

ஆறாம் திருமுறை பாடல்களைத் தொகுத்து, ‘இராமலிங்கர் பாடல் திரட்டு’ என்ற நூலை 1940ல் வெளியிட்டவர், தந்தை பெரியார்! இன் னும் ஒருபடி மேலே சென்று, தமிழர்கள் முன்பு, பெரியார் ஒரு கேள்வியை முன்வைத்தார். தந்தை பெரியார் என்ன கேட்டார் தெரியுமா? “வட நாட்டு சாமியார்களை போற்றும் தமி ழனே, வடலூர் வள்ளலார் எந்த விதத்தில் தாழ்ந்தவர்?” என்று கேட்டார். இதையெல்லாம் உணர்ந்துதான், “வள்ளலாரின் கொள்கை களை சமுதாயக் களத்தில், தந்தை பெரியார் பரப்புரை செய்தார்” என்று தவத்திரு குன்றக்குடி அடிகளாரே சொல்லியிருக்கிறார். அந்த வழி யில்தான் சமத்துவத்தையும், சமூகநீதியையும் நிலை நாட்டுகின்ற நம்முடைய அரசு எங்களு டைய கோட்பாடு “எல்லார்க்கும் எல்லாம்” என்ற அவருடைய சிந்தனையின் செயல் வடிவம்தான்!

## ஏழு புதிய அறிவிப்புகள்!

- **முதல் அறிவிப்பு – இந்த அனைத்துலக வள்ளலார் மாநாடு நடைபெற்றதை குறிக்கின்ற விதமாக இந்த பள்ளி வளாகத்தில், நினைவுத் தூண் அமைக்கப்படும்.**
- **இரண்டாவது அறிவிப்பு–வடலூரில், சன்மார்க்க பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தப்படும். அந்தப் பள்ளியில் திருவருட்பா இசைப்பயிற்சியும் அளிக்கப்படும்.**
- **மூன்றாவது அறிவிப்பு–வடலூரில், வள்ளலார் பெயரில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும்.**
- **நான்காவது அறிவிப்பு –‘ஸ்பிரிச்சுவல் அல்கெமி’ என்ற வள்ளலார் புத்தகம் அறநிலையத் துறை பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்படும்.**
- **ஐந்தாவது அறிவிப்பு–வள்ளலார் பிறந்த நாளை யொட்டி ஆண்டுதோறும் மூன்று நாட்கள் விழா நடத்தப்படும்.**
- **ஆறாவது அறிவிப்பு – மேட்டுக்குப்பம், மருதூர், கருங்குழி ஆகிய இடங்களில், ‘வள்ளலார் அன்னதான கூடங்கள்’ திறக்கப்படும்.**
- **ஏழாவது அறிவிப்பு–கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் அமைந்து வரும் பூங்காவுக்கு ‘வள்ளலார் பூங்கா’ என பெயர் சூட்டப்படும்.**

இந்த மாநாட்டிற்கு வந்துவிட்டு புதிய அறி விப்புகளை வெளியிடாமல் சென்றால், சேகர் பாபு அவர்களுக்கும் நிம்மதி இருக்காது – எனக் கும் திருப்தி இருக்காது.

அதனால், ஏழு அறிவிப்புகளை நான் வெளி யிட விரும்புகிறேன்.

முதல் அறிவிப்பு – இந்த அனைத்துலக வள்ளலார் மாநாடு நடைபெற்றதை குறிக்கின்ற விதமாக இந்த பள்ளி வளாகத்தில், நினைவுத் தூண் அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு– வடலூரில், சன்மார்க்க பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தப்படும். அந்தப் பள்ளியில் திருவருட்பா இசைப்பயிற்சி யும் அளிக்கப்படும்.

மூன்றாவது அறிவிப்பு– வடலூரில், வள்ளலார் பெயரில் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும்.

நான்காவது அறிவிப்பு – ‘ஸ்பிரிச்சுவல் அல் கெமி’ என்ற வள்ளலார் புத்தகம் அறநிலைத் துறை பதிப்பகத்தின் மூலமாக வெளியிடப்படும்.

ஐந்தாவது அறிவிப்பு – வள்ளலார் பிறந்த நாளையொட்டி ஆண்டுதோறும் மூன்று நாட் கள் விழா நடத்தப்படும்.

ஆறாவது அறிவிப்பு – மேட்டுக்குப்பம், மரு தூர், கருங்குழி ஆகிய இடங்களில், ‘வள்ளலார் அன்னதான கூடங்கள்’ திறக்கப்படும்.

ஏழாவது அறிவிப்பு – கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் அமைந்து வரும் பூங்காவுக்கு ‘வள்ளலார் பூங்கா’ என பெயர் சூட்டப்படும்.

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தானே!

**சென்னையில் வள்ளலார் ஆய்வு மையம்!**

அதேபோல், இங்கு மதிப்பிற்குரிய நம்மு டைய கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் சொன்ன கோரிக்கைகள் உண்டு. தலைநகர் சென்னையில், வள்ளலார் ஆய்வு மையம் அமைக்கப்படும் என்பது.

அந்த ஆய்வு மையம் இந்து சமய அறநி லையத் துறையின் வளாகத்தில் அமைக்கப்ப டும். மற்ற கோரிக்கைகளும் நிச்சயம் பரிசீலிக் கப்படும்.

எனவே, இந்த மாநாட்டு மூலமாக, வள்ள லாரைப் பற்றி இளைய தலைமுறையினருக்கு சுருக்கமாக அறிமுகப்படுத்த வேண்டும் என் றால், அன்பின் வழியாக சமத்துவத்தை, உயிர் கள் மீதான கருணையை, தமிழ்ச் சமூகத்தின் வழியாக இந்த உலகத்துக்கு எடுத்துரைத்த பேரன்பின் வடிவம்தான் வள்ளலார் அவர்கள்! “சாதியிலே, மதங்களிலே, சமயநெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டை யிலே, ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர் அழி தல் அழகலவே” என்று சொல்லி, அறிவு நெறியை பரப்பியவர் வள்ளலார் அவர்கள் !

**வள்ளலாரின் பெருங்கனவுதான் திராவிடத்தின் உயிர்க்கொள்கை!**

இந்தச் சமூகத்தில், இறுகிப் போயிருந்த பழ மைவாதங்களையும், மூடத்தனங்களையும் சாடியவர் அவர்! சாதி, சமய வேறுபாடுகள்

**வள்ளலாரின் நோக்கங்களை சிதைத்திட அனுமதிக்கக் கூடாது!**

இங்கே கூடியிருக்கும் அன்பர்கள் எல்லோ ரிடத்திலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, வள்ளலாரைப் போற்றுவதோடு, நம்முடைய பணி நின்றுவிடக் கூடாது; அவருடைய நோக் கங்களை மக்கள் முழுமையாக உணர்ந்து, கடைப்பிடிக்க பாடுபட வேண்டும்! அதற்கு இந்த மாநாடு வழி வகுக்கவேண்டும். ஏனென்றால், நம்முடைய பண்பாட்டு அடையாளங்களுக்கு வேறு வர்ணம் பூச நினைக்கிறார்கள், வள்ள லாரின் நோக்கங்களை சிதைத்திட நாம் அனு மதிக்க கூடாது! பிரிவினைச் சக்திகளுக்கு ஒரு போதும் இடம் கொடுக்காமல், அன்பும் பண்பும் அறனும் கருணையும் கொண்ட சமுதா யத்தை உருவாக்க உழைப்போம்!

சமத்துவம் போற்றும் அன்பு வழியாம் வள்ளலார் நெறி எங்கெங்கும் பரவட்டும்! என்றென்றும் நிலைக்கட்டும்! அவர் ஏற்றி வைத்த ஜோதியைப் போல சுடர்விட்டும் அணையாத அடுப்பைப் போல அனைவரின் தேவைகளை நிறைவேற்றி, இடர் போக்கும் இனிய அரசாகவும், நம்முடைய திராவிட மாடல் அரசு என்றென்றும் திகழும் என்று கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தேன்?



தமிழ்நாட்டின் இன்றையப் பொருளாதார வளர்ச்சிக்கும் அதன் பரவலான பங்கீட்டுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாக்கிய சமூக, அரசியல் பண்பாட்டுத் தளங்களே அடிப்படை.

திராவிட மாடல் கருத்தியல் என்பது அரசியலமைப்புச் சட்டம் உறுதி செய்யும் சமூக நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதியை மக்கள் அனைவரும் பெற்று, நாட்டு ஒற்றுமை, ஒருமைப்பாட்டைக் காத்து, கண்ணியத்தோடும் சுதந்திரத்தோடும் சமத்துவத்தோடும் வாழ வழிவகுக்கும் உயர்ந்த கோட்பாடு.

நூற்றாண்டு கண்ட சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை திராவிட முன்னேற்ற கழகம் ஏற்று 75 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து மக்களோடு உறவாடி உருவாக்கிய திராவிட மாடல் இன்று ஒட்டு மொத்த இந்தியாவின் வளர்ச்சிக்கான மாடலாக மாறத் தொடங்கி உள்ளது.

வலிமையான இந்தியாவுக்கான கொள்கை முன்னோடியாகத் தமிழ்நாடும், வளமான தமிழ்நாட்டுக்கான அடிப்படையாகத் திராவிட முன்னேற்றக் கழகமும் செழித்து விளங்க வேண்டும்.

**வெறுப்பு அரசியல், மறுப்பு அரசியல், பிரிப்பு அரசியல், விரக்தி அரசியல் போன்றவற்றை ஒதுக்கி, சமுதாயப் பொருளாதார பண்பாட்டு மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்ட திராவிட மாடல் அரசியலில் சேர்ந்து மக்கள் பணியாற்ற. திராவிடம் அளித்த கல்வியால் பயன்பெற்ற என்னைப் போன்றோர் முன்வராவிட்டால், நான் பெற்ற அந்தக் கல்வியால் என்ன பயன்?**

தமிழ்நாட்டு வளர்ச்சி தொடர்ந்திட, நாம் நினைவில் கொண்டு செயல்பட வேண்டிய நெறிமுறைகள்:

**பேரறிஞர் அண்ணா அளித்த வரைமுறைகள் (1949):**

1. அமைப்புமுறை என்ற வாள்!
2. அன்பு என்ற கேடயம்!
3. கண்ணியம் என்ற கவசம்!
4. கட்டுப்பாடு என்ற முரசம்!
5. கடமையாற்றுவோம் என்ற முழக்கம்.

**முத்தமிழறிஞர் கலைஞர் கொடுத்த கொள்கைகள் (1970):**

1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்.
2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்.
3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்.
4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.
5. மத்தியிலே கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி.

**கழகத் தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் முன் வைத்த முழக்கங்கள்(2018):**

1. கலைஞரின் கட்டளையைக் கண்போல் காப்போம்.
2. தமிழரை வளர்த்து தமிழைப் போற்றுவோம்.
3. அதிகாரக்குவியலை அடித்து நொறுக்குவோம்.
4. மதவெறியை மாய்த்து மனிதநேயம் காப்போம்.
5. வளமான தமிழகத்தை வளர்த்தெடுப்போம்.

முனைவர் **க.பாலமுருகன்**
முன்னாள் ஐ.ஆர்.எஸ். அதிகாரி

# “L” வடிவ மேம்பாலம் முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒருவழி வாகன போக்குவரத்து கொண்ட தாகவும், வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தின் மொத்த நீளம் அணுகு சாலை உட்பட 652 மீட்டர் ஆகும்.

சர்தார் பட்டேல் சாலையிலிருந்து ராஜீவ் காந்தி சாலைக்கு பிரிந்து செல்லும் இடத்தில் பாலம் வளைவாகவும், இவ்வ ளைவானது 45 மீட்டர் ஆரம் (Radius) கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வளைவுப் பகுதியில் பாலத்தின் அக லம் கூடுதலாக்கப்பட்டதுடன், மணிக்கு 30 கி.மீ வேகத்தில் மட்டுமே பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், கூடுதல் பாதுகாப்புக்காக பாலத்தின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள தடுப்புசுவரின் உயரமும் அதிகரிக்கப்பட்டு, வாகனங்கள் இவ்வளைவில் செல்லும் போது சிரமமின்றி கடந்து செல்லும் வண் ணம் குறுக்குவெட்டு சாய்வுடன் (Super elevation) வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த வளைவுப் பகுதியில் எவ் வித பயமின்றி பொதுமக்கள் பயணிக்க லாம். எனினும், பாலத்தின் மீதான பய ணத்திற்கு வேக கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளது. அத்துடன் வேக கட்டுப்பாட்டிற் கான எச்சரிக்கை பலகைகள் பாலத்தின் தடுப்புச்சுவரில் பொருத்தப்பட்டுள்ளது.

**பொது மக்களின் பயண நேரம் குறையும்!**

இப்பாலத்தின்மீது பயணிக்கும் வாக னங்கள் இரண்டு வழித்தடங்களிலும் ஒன் றுக்கொன்று இடையூறின்றி பயணிக்க ஏதுவாக பாலத்தின் ஓடுதளத்தில் வழித்தட கோடுகள் (Lane marking) அமைக்கப்பட் டுள்ளது. இரவு நேரங்களில் பாதுகாப்பான பயணத்திற்கு தேவையான மின் விளக்கு களும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த மேம்பாலம் திறக்கப்படுவதன் மூலம் ராஜீவ் காந்தி சாலை, கிண்டி, அடை யாறு, மத்திய கைலாஷ் ஆகிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, பொதுமக்களின் பயண நேரமும் குறை யும்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன் னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப் பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அசன் மௌலானா, க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாக ரராஜா, எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், நெடுஞ்சாலை கள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், தமிழ் நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் II மற்றும் சென்னை கன்னியாகுமரி தொழில்தட திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் ஜவஹர் முத்து ராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.